அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014
தொலைப்பேசி : 044 - 28481235

டிடிவி தினகரன்
பொதுச்செயலாளர்

"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 07.09.2022

# பொன் ஓணம் திருநாள் வாழ்த்துகள்!

**பொன் ஓணம் திருநாளைக் கொண்டாடும் மலையாள மொழி பேசும் மக்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

ஓணம் திருநாள் கேரள மக்களின் அறுவடைத் திருநாள் என்பது மட்டுமின்றி, சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் கொண்டாடி மகிழும் நாள்.

**நாடாளும் சக்கரவர்த்தியாக இருந்தாலும், ஆணவம் அழிவையே ஏற்படுத்தும் என்பதையும், எல்லோரையும் அன்போடு நேசித்து அரவணைப்பவரே மக்கள் மனங்களை வெல்ல முடியும் என்பதையும் மகாபலி சக்கரவர்த்தியின் வழியாக ஓணம் நமக்குச் சொல்லித் தருகிறது.**

இந்நன்னாளில் சாதி, மதங்களைக் கடந்து, அனைவரும் சகோதரர்களாக வாழ்வதற்கு உறுதியேற்போம். பேசுகிற மொழி வெவ்வேறாக இருந்தாலும், இந்தியர் என்ற உணர்வோடு ஒன்றுபட்டு நிற்போம்.

**பொன் ஓணம் திருநாள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், மன நிறைவையும் கொண்டு வந்து சேர்க்கிற திருநாளாக அமைய வாழ்த்துகிறேன்.**

**டிடிவி தினகரன்**